பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**06 06 2026** **06 45**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாட்டின் வளர்ச்சிக்கான தங்களது அரசின் செயல்திட்டங்களை வாக்காளர்கள் நம்புவதால் பிஜேபி-க்கு தொடர்ந்து ஆதரவை வழங்கி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** கடல்சார் பொருட்களின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

**3.** மண்வள பாதுகாப்புத் திட்டம், நாடு முழுவதும் மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

**4.** தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

**5.** 'நார்வே செஸ்' தொடரின் பட்டத்தை இந்தியாவின் இளம் வீரர் பிரக்ஞானந்தா வென்றுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சிக்கான தங்களது அரசின் செயல்திட்டங்களை வாக்காளர்கள் நம்புவதால் பிஜேபி-க்கு தொடர்ந்து ஆதரவை வழங்கி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சூரத்தில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், மேற்குவங்கம், அசாம் மற்றும் புதுச்சேரியில் சமீபத்தில் நடைபெற்ற தேர்தல்களில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாடு முழுவதும் நடைபெற்று வரும் பஞ்சாயத்து மற்றும் மாநகராட்சித் தேர்தல்களிலும் இது பிரதிபலித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

சமீபத்தில் இமாச்சலப்பிரதேசம், ஹரியானா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல் முடிவுகளைச் சுட்டிக்காட்டிய திரு மோடி, நாடு நிச்சயமற்ற தன்மையையோ அல்லது விரக்தியையோ விரும்புவதில்லை என்று கூறினார்.

இந்தியா எதிர்மறை எண்ணங்களைக் கடந்து வெகுதூரம் வந்துவிட்டது என்றும் பிரதமர் கூறினார்.

<<<<>>>>

கடல்சார் பொருட்களின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நேற்று தொடங்கிய, கடல் உணவு ஏற்றுமதி குறித்த பயிலரங்கில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில் இதனை தெரிவித்தார்.

மீன்வளத்துறையின் உலகளாவிய சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்த மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் இந்தியா 9 நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை செய்துகொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த ஒப்பந்தங்கள் புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாகவும், இதன் மூலம் இந்திய கடல்சார் உணவுகள் உலகெங்கிலும் உள்ள நுகர்வோரைச் சென்றடைய வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் திரு பியுஷ் கோயல் கூறினார்.

<<<<>>>>

மண்வள பாதுகாப்புத் திட்டம், நாடு முழுவதும் மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

மண்ணின் வளத்தைப் பாதுகாக்கவும், ரசாயன உரங்களுக்கு மாற்றாக சமச்சீர் உரப் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

நடப்பு ஜூன் மாத நிலவரப்படி, நாடு முழுவதும் 9 லட்சத்து 42 ஆயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள் இந்த இயக்கத்தில் இணைந்துள்ளதாக வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, நாடு முழுவதும் இதுவரை 17 ஆயிரத்து 800-க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

மண்வளம் மற்றும் அறிவியல்பூர்வமான நவீன வேளாண் நுட்பங்கள் குறித்து, ஒரு லட்சத்து 57 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

புதுதில்லியில் வரும் **8**ஆம் தேதி நடைபெறவுள்ள காங்கிரஸ் தலைமையிலான எதிர்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி பங்கேற்கும் என்று அக்கட்சியின் தலைவர் திரு தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

திண்டிவனத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், **INDI** கூட்டணி அமைந்ததில் திமுக-வின் பங்கு மகத்தானது என்று குறிப்பிட்டார்.

திமுக இல்லாமல் இந்தக் கூட்டணி கூடுவது, கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

**INDI** கூட்டணி சிதறிவிடக் கூடாது என்பதே தங்கள் கட்சியின் விருப்பம் என்றும் திரு. திருமாவளவன் கூறினார்.

<<<<>>>>

தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்ளத் தேவையான பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் விரிவாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதலமைச்சர் தலைமையில் இதுதொடர்பான ஆய்வுக்

கூட்டங்கள் நடத்தப்பட்டு, பேரிடர் மேலாண்மைப் பணிகள் மிகவும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

அண்டை மாநிலமான கேரளத்தின் வயநாட்டில் ஏற்பட்டது போன்ற நிலச்சரிவு சம்பவங்கள் தமிழ்நாட்டில் எங்கும் ஏற்படாத வண்ணம் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன எனறும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீராக பராமரிக்கப்பட்டு வருவதாகவும், போதைப்பொருள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அரசு தொடர்ந்து கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணைத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த தேவையான அனைத்து சட்டப்பூர்வ நடவடிக்கைகளையும் முதலமைச்சர் மேற்கொண்டு வருவதாகவும் திரு. செங்கோட்டையன் மேலும் கூறினார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது மிகுந்த அதிர்ச்சியளிப்பதாக மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் திரு. ஜவாஹிருல்லா தெரிவித்துள்ளார்.

தருமபுரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தவெக அரசு பொறுப்பேற்ற பிறகு பாலியல் வன்கொடுமைகள், கொலை மற்றும் கொள்ளை போன்ற நிகழ்வுகள் அன்றாட சம்பவங்களாக மாறியிருப்பது கவலையளிப்பதாகக் குறிப்பிட்டார்.

தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை தவெக அரசு நிறைவேற்றவில்லை என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

அரசு இசைப் பள்ளிகளில் படித்த மாணவர்கள் இசைக் கல்லூரிகளில் நேரடியாக மூன்றாவது ஆண்டில் சேர்ந்து படிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களுக்கு படிப்புடன் கல்வி உதவித் தொகையும் வழங்கப்படுவதாக சேலம் மாவட்ட கலை பண்பாட்டுத்துறை உதவி இயக்குநர் திரு. சங்கரராமன் கூறினார்.

**(Voice Byte — Sankararaman — 46 Sec)**

<<<<>>>>

தமிழகத்தில் இன்று ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களின் மலைப் பகுதிகள், கன்னியாகுமரி, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருப்பூர், மதுரை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

தைவான் நாட்டைச் சுற்றியுள்ள கடல் மற்றும் வான் பகுதிகளில், சீன ராணுவத்திற்குச் சொந்தமான **22** போர் விமானங்கள் மற்றும் **10** போர்க்கப்பல்களின் நடமாட்டத்தைத் கண்டறிந்துள்ளதாக தைவான் கூறியுள்ளது.

-------------

இந்தியா - பிலிப்பைன்ஸ் இடையே வர்த்தகத்தைப் பெருக்குவதற்கு இரு நாடுகளின் கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் முடிவு செய்துள்ளது.

-------------

சிபிஎஸ்இ பத்தாம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வு மதிப்பெண்களை சரிபார்ப்பதற்கும், மறுமதிப்பீடு செய்வதற்கும் விண்ப்பிப்பதற்கான கடைசி தேதி நாளை வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

-------------

பத்ம விருதுகளுக்கான பரிந்துரைகளை அடுத்த மாதம் 31-ஆம் தேதி வரை அனுப்பலாம் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

-------------

JEE Advance தேர்வில் ஆயித்துக்கும் மேற்பட்ட மாணவிகள் முதல் முறையாக தேர்ச்சியடைந்துள்ளனர்.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலை ஒன்றியம் வெள்ளிமலை முதல் சின்ன திருப்பதி வரை அமைக்கப்பட்டு வரும்

சாலை மேம்பாட்டு பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பத்மஜா நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் பேரிடர் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்த ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு. ரவிக்குமார் தலைமையில் நேற்று நடைபெற்றது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

செஸ் விளையாட்டில் இந்தியாவிற்குப் பெருமை சேர்க்கும் வகையில், இளம் கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தா வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

நார்வேயில் நடைபெற்ற 'நார்வே செஸ்' தொடரின் இறுதிச் சுற்றில், ஜெர்மனியின் வின்சென்ட் கெய்மரை வீழ்த்தி இப்பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை அவர் நிகழ்த்தியுள்ளார்.

இறுதிநாள் ஆட்டத்திற்கு முன்னதாக 15 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் இருந்த பிரக்ஞானந்தா, இறுதிச்சுற்றில் அபாரமாக விளையாடி முழுமையாக மூன்று புள்ளிகளைப் பெற்றார்.

இதன் மூலம் மொத்தம் பதினெட்டு புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்து, உலக செஸ் அரங்கின் மிக உயரிய கோப்பைகளில் ஒன்றைக் கைப்பற்றியுள்ளார்.

--------------

இந்தியா - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

**<<<<The End>>>>**